DEPOSITION OF WITNESS

IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED UNDER SC/ST(POA) ACT, 1989, RAMANATHAPURAM

**Spl.Sessions Case No. 12/2020**

அ.சா. 1

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | வைரவகேசு | Caste: | |
| Father's Name: | காளியப்பன் | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 31.08.2023.

(A2 , A6 absent. U/s. 317 Crpc petition filed and allowed. Others present)

முதல் விசாரணை

நான் தற்போது தேவிப்பட்டிணம் வடக்கு தெருவில் குடியிருந்து வருகிறேன். நான் கட்டிட தொழில் செய்து வருகிறேன். நான் இந்து பள்ளர் சாதியைச் சார்ந்தவர். ஆஜர் எதிரிகளைத் தெரியும். நீதிமன்றத்திற்கு வராத எதிரிகள் சரவணன் மற்றும் கார்த்திக்கை தெரியும். (எதிரிகள் குவிமுச 317 ன் கீழ் மனு அனுமதிக்கப்பட்டது). எதிரிகள் பாலா என்ற பாலமுரளி, சதீஷ்கண்ணன், கார்த்திக் ஆகியோர் இந்து மறவர் வகுப்பைச் சார்ந்தவர்கள். எதிரி சேதுபதி நாடார் வகுப்பைச் சேர்ந்தவர். எதிரிகள் இளையராஜா, சரவணன், மகேந்திரன், பாஸ்கரன் ஆகியோர் இந்து அகமுடையர் வகுப்பைச் சார்ந்தவர்கள். எனக்கு அரவிந்தன் என்ற மூத்த மகனும், அபிநயா என்ற மகளும் இருந்தார்கள். அபிநயா கல்லூரியில் படிக்கிறார். அரவிந்தன் கட்டிட கான்ட்ராக்டராக இருந்து மணல் வியாபாரம் செய்து வந்தார். கடந்த 18.02.2020 அன்று எதிரி பாலா என்ற பாலமுரளி திருட்டு மணல் எடுத்தால் அவருடைய JCB,

டிராக்டர் ஆகியவற்றை கைப்பற்றி போலிசார் அவரை ஜெயிலுக்கு அனுப்பிவிட்டனர். எதிரி பாலா என்ற பாலமுரளி ஜெயிலுக்கு போவதற்கு முன்பு என் மகன் அரவிந்தனை போனில் தொடர்புகொண்டு " பள்ளத் தேவுடியா மகனே, என் வண்டியை பிடித்து கொடுத்துவிட்டாயடா, உன்னை கொல்லாமல் விடமாட்டேன் " என்று மிரட்டியதாக என் மகன் அரவிந்தன் என்னிடம் சொன்னார். நான் தேவையில்லாமல் யாரிடமும் பேசாதே என்று சொல்லிவிட்டேன். அதன்பிறகு எதிரி பாலா என்ற பாலமுரளி ஜெயிலுக்கு போய்விட்டு வந்துள்ளார். 21.03.2020 அன்று மாலை 6.00 மணிக்கு என் மகன் அரவிந்தன் தேவிப்பட்டிணத்திலிருந்து இராமநாதபுரத்திற்கு வண்டிக்கு ஒரு உதிரி பாகம் வாங்கிவிட்டு வருவதாக சொல்லி அவருடைய இருசக்கர வாகனமான பஜாஜ் பல்சர் கருப்பும் ஊதா கலந்த TN 65 AK 6018 என்ற எண் கொண்ட வண்டியில் கல்யாணக்குமார் என்பவருடன் புறப்பட்டார். கல்யாணக்குமார் வண்டியை ஓட்டினார். என் மகன் பின்னால் அமர்ந்து இராமநாதபுரம் வந்துள்ளார்கள். இராமநாதபுரத்திலிருந்து திரும்பவும் தேவிப்பட்டிணம் வரும் வழியில் வேலுமாணிக்கம் பெட்ரோல் பல்க்கில் இருசக்கர வாகனத்தில் பெட்ரோல் போட்டு போகும்போது எதிரி பாலா என்ற பாலமுரளியும் அவருடன் சிலரும் பதிவு எண் இல்லாத வெள்ளை நிற Hyundai creta காரில் இருந்துகொண்டு என் மகன் அரவிந்தனையும் கல்யாணக்குமாரையும் முறைத்து பார்த்ததாகவும் அதனால் விரைவாக பெட்ரோல் போட்டுக்கொண்டு தேவிப்பட்டிணம் சென்றுவிடலாம் என்று தேவிப்பட்டிணம் வந்து கொண்டிருந்தபோது அவர்களை மேற்கூறிய காரில் எதிரிகள் தொடர்ந்து வந்து சக்கரவாலநல்லூர் விலக்கில் ரோட்டிற்கு மேற்குபுறம் காரை வைத்து இடித்து தள்ளியதில் என் மகனுக்கு தலையில் பலத்த காயம்

ஏற்பட்டதாகவும், கல்யாணக்குமாருக்கு ஊமைக்காயம் ஏற்பட்டது என்றும், அருகில் இருந்த முனியாண்டி மகன் ஆதிமூலம், சோனைமுத்து மகன் முனியாண்டி, சோனைமுத்து மகன் காளிதாஸ் ஆகியோர் போய் பார்த்தபோது என் மகன் பேச்சு மூச்சு இல்லாமல் கிடந்ததாகவும், ஆதிமூலம் கல்யாணக்குமாரிடம் விசாரித்தபோது அரவிந்தன் மீது இருந்த பகையால் எதிரி பாலா என்ற பாலமுரளி இப்படி செய்ததாக கல்யாணக்குமார் சொல்லியுள்ளார். இதனை ஆதிமூலம் எனக்கு போன்மூலம் தகவல் தெரிவித்தார். நான் உடனே என் தம்பி பூமிராஜனுடன் புறப்பட்டு சம்பவ இடத்திற்கு வந்துவிட்டேன். தகவல் அறிந்து போலிசாரும் அந்த இடத்திற்கு வந்துவிட்டார்கள். தங்கராஜ் என்ற சார்பு ஆய்வாளர் இருந்தார். அந்த வழியே வந்த ஒரு காரில் போலிசாரின் உதவியுடன் என் மகன் அரவிந்தனையும், கல்யாணக்குமாரையும் என் தம்பி பூமிராஜனையும் இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவிட்டு நானும் என்னுடைய இருசக்கர வாகனத்தில் மருத்துவமனைக்கு வந்துவிட்டேன். என் மகனை மருத்துவமனையில் இரவு 11.30 மணிக்கு சிகிச்சைக்கு சேர்த்தேன். சிகிச்சை பலனின்றி என் மகன் இரவு 11.45 மணிக்கு இறந்துவிட்டார். கொரானா காலமாக இருந்ததால் மறுநாள் மதியம் 1.30 மணிக்கு தேவிப்பட்டிணம் காவல்நிலையத்தில் ஒரு புகார் கொடுத்தேன். அந்த புகார் **அ.சா.ஆ.1** . அதில் அறிவேன் சாட்சியாக என் தம்பி பூமிராஜன் கையொப்பம் செய்தார். சம்பவம் நடந்த அன்று என் மகன் கிரே கலர் பேண்ட்டும், அரக்கு கலர் புளூ பாடர் போட்ட சட்டையும், கருப்பு சிவப்பு கலந்த டிரவுசர் ஒன்று அணிந்திருந்தார். அதைப் பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட முடியும். தற்போது நீதிமன்றத்தில்

காண்பிக்கப்படுவதுதான் அவர் அணிந்திருந்த கிரே கலர் பேண்ட். அது **சா.பொ.1**. இரத்தக்கரை படிந்த அரக்கு கலர் சட்டை **சா.பொ.2**. இதில் புளு கலர் பாடர் இல்லை என்று எதிரிகள் தரப்பு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்பட்டது. இரத்தக்கரை படிந்த வெள்ளை நிற பனியன் **சா.பொ.3**. கருப்பு சிவப்பு கலந்த டிரவுசர் **சா.பொ.4**. இதுசம்பந்தமாக இராமநாதபுரம் காவல்துணைக்கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார்.

எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜராகியும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

Sd/- B.C.Gopinath
Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM

**Spl.Sessions Case No.12/2020**

அ.சா.2

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | ஆதிமூலம் | Caste: | |
| Father's Name: | முனியாண்டி | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 31.08.2023.

(A2 , A6 absent. U/s. 317 Crpc petition filed and allowed. Others present)

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது தேவிப்பட்டிணத்தில் உள்ள சக்கரவாலநல்லூரில் குடியிருந்து வருகிறேன். நான் கட்டிட கான்ட்ராக்டராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளில் 2 வதாக நிற்கும் எதிரி சேதுபதியை எனக்கு தெரியும். கடந்த 21.03.2020 அன்று இரவு 10.30 மணிக்கு நானும், சோனைமுத்து மகன் காளிதாஸ், சோனைமுத்து மகன் முனியாண்டி ஆகியோர் இராமநாதபுரம் செல்வதற்காக சக்கரவாலநல்லூர் பஸ்ஸடாப்பில் நின்று கொண்டிருந்தோம். அப்போது இராமநாதபுரத்திலிருந்து தேவிப்பட்டிணம் நோக்கி ஒரு ஊதா கலர் கருப்பு கலந்த பல்சர் இருசக்கர வாகனம் வந்து கொண்டிருந்தது. அதற்கு பின்னால் அதை விரட்டியவாறே ஒரு Hyundai Creta என்ற வெள்ளை நிற பதிவு எண் இல்லாத கார் வந்து கொண்டிருந்தது. சக்கரவாலநல்லூர் விலக்கு அருகில் டமார் என்று சத்தம் வந்ததும் பார்த்ததும் இருசக்கர வாகனத்தின் மீது கார் மோதியது தெரிந்தது. இருசக்கர வாகனத்தில் வந்த இருவரும்

தூக்கி வீசப்பட்டார்கள். அந்த காரில் 4,5 நபர்கள் இருந்தார்கள். அதில் தேவிப்பட்டிணம் வடக்கு தெருவைச் சேர்ந்த இராமன் மகன் சேதுபதி மட்டும் என்னால் அடையாளம் பார்க்க முடிந்தது. மற்றவர்களை அடையாளம் பார்க்க முடியவில்லை. அந்த வண்டி தேவிப்பட்டிணம் நோக்கி சென்று உடனே இராமநாதபுரம் நோக்கி வந்துவிட்டது. தூக்கி வீசப்பட்ட ஆட்களை போய் பார்த்தபோது அவர்கள் கேசவன் மகன் அரவிந்தன் என்றும், கல்யாணக்குமார் என்றும் தெரிந்து கொண்டேன். அவர்கள் பக்கத்து ஊரைச் சேர்ந்த எனது தூரத்து உறவினர்கள். அரவிந்தனை தூக்கும்போது அவர் தலையின் பின்பக்கம் அடிபட்டு இரத்தம் வடிந்த நிலையில் மயக்கமாக இருந்தார். கல்யாணக்குமார் ஊமைக்காயத்துடன் சற்று பதற்றமான நிலையில் இருந்தார். கல்யாணக்குமாரை தூக்கி மெதுவாக வரக்கூடாதா என்று கேட்டேன். அதற்கு கல்யாணக்குமார் நாங்கள் மெதுவாகத்தான் வந்தோம், ஆனால் அரவிந்தனுக்கு வேண்டாதவர்கள் பின்னாடி வந்து எங்களை மோதிவிட்டார்கள் என்று சொன்னார். இந்த தகவலை அரவிந்தன் அப்பா வைரவகேசுவிற்கு போன் மூலம் தெரிவித்தேன். பிறகு அந்த வழியே வந்த கார் மூலம் இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து செல்ல முயற்சி செய்தபோது வைரவகேசு அங்கு வந்துவிட்டார். வைரவகேசுவும் அவர் தம்பி பூமிராஜனும் மருத்துவமனைக்கு சென்றுவிட்டார்கள். நாங்கள் வீட்டிற்கு சென்றுவிட்டோம். பின்னர் இரவு 11.45 மணிக்கு அரவிந்தன் இறந்துவிட்டதாகவும், கல்யாணக்குமார் பிழைத்துவிட்டதாகவும் கேள்விப்பட்டேன். இதுசம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

இந்த விபத்திற்கு சம்பந்தப்பட்ட வாகனங்களைப் பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட முடியும்.

(எதிரிகள் தரப்பில் மேற்படி ஆவணங்களின் புகைப்படங்கள் தங்களுக்கு குவிமுச 207ன் கீழ் வழங்கப்படவில்லை என்று ஆட்சேபனை தெரிவித்ததால் விசாரணை இத்துடன் நிறுத்தப்பட்டது)

Sd/- B.C.Gopinath
Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)